| | | |
|---|---|---|
| உம்பல் அகைத்த ஒண்முறி யாவும் | | |
| தளிரொடு மிடைந்த காமரு கண்ணி | 430 | மலைபடுகடாம் |
| | | |
| கடுங்கதிர் திருகிய வேய்பயில் பிறங்கல் | 15 | |
| பெருங்களிறு உரிஞ்சிய மண் அரை யாஅத்து | | |
| அருஞ்சுரக் கவலைய அதர்படு மருங்கின் | | அகநானூறு 17 |
| | | |
| உயாவிளி பயிற்றும் யாஉயர் நனந்தலை | | |
| உருள்துடி மகுளியின் பொருள் தெரிந்து இசைக்கும் | | |
| கடுங்குரற் குடிஞைய நெடும்பெருங் குன்றம் | 5 | அகநானூறு 19 |
| | | |
| இலைஇல ஓங்கிய நிலைஉயர் யாஅத்து | 5 | |
| மேற்கவட்டு இருந்த பார்ப்பினங் கட்குக் | | அகநானூறு 31 |
| | | |
| கவைமுறி இழந்த செந்நிலை யாஅத்து | | |
| ஒன்றுஓங்கு உயர்சினை இருந்த வன்பறை | | |
| வீளைப் பருந்தின் கோள்வல் சேவல் | 5 | அகநானூறு 33 |
| | | |
| ஆள்வழக்கு அற்ற சுரத்திடைக் கதிர்தெற | 1 | |
| நீள்எரி பரந்த நெடுந்தாள் யாத்து | | அகநானூறு 51 |
| | | |
| வான்தோய் புணரி மிசைக்கண் டாங்கு | 12 | |
| மேவரத் தோன்றும் யாஅஉயர் நனந்தலை | | அகநானூறு 65 |
| | | |
| கவைஒண் தளிர கருங்கால் யாஅத்து | 15 | |
| வேனில் வெற்பின் கானம் காய | | அகநானூறு 186 |
| | | |
| பொறித்த போலும் வால்நிற எருத்தின் | 5 | |
| அணிந்த போலும் செஞ்செவி எருவை | | |
| குறும்பொறை எழுந்த நெடுந்தாள் யாஅத்து | | அகநானூறு 193 |
| | | |
| மிசைமரம் சேர்த்திய கவைமுறி யாஅத்து | | |
| நார்அரை மருங்கின் நீர்வரப் பொளித்துக் | 15 | அகநானூறு 257 |

நீடுநிலை யாஅத்துக் கோடுகொள் அருஞ்சுரம்
கொண்டனன் கழிந்த வன்கண் காளைக்கு
அவள் துணிவு அறிந்தனென் ஆயின் அன்னோ 10 அகநானூறு 263

கணைக்கால் அம்பிணை ஏறுபுறம் நக்க 10
ஒல்குநிலை யாஅத்து ஓங்குசினை பயந்த அகநானூறு 287

சாரல் யாஅத்து உயர்சினை குழைத்த 1
மாரி ஈர்ந்தளிர் அன்ன மேன அகநானூறு 337

கண்பொரி கவலைய கானத்து ஆங்கண்
நனந்தலை யாஅத்து அம்தளிர்ப் பெருஞ்சினை 10 அகநானூறு 343

கருங்கால் யாத்துப் பருந்துவந்து இறுக்கும்
சேண்உயர்ந்து ஓங்கிய வானுயர் நெடுங்கோட்டு 14 அகநானூறு 397